149

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ॥

வேதாந்த தீபிகை.

ஸம்பாதகர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 19] சுக்லஸ்ரீ சித்திரைமீ [ஸஞ்சிகை 7

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா

[ஸ்ரீ பாகவதம், 1-9-23]

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்.

[ஸ்ரீ. உப. வித்வாம். எ. வி. கோபாலாசார்யர், திருச்சி.]

(ஸஞ்சிகை 6, பக்கம் 161 தொடர்ச்சி.)

இந்த நாடகம் ஆரம்பிக்கும் காலத்தில் வஸந்தோத்ஸவம் ஆரம்பித்திருக்கிறதென்று ப்ரஸ்தாவனையில் முடிவில் ஸூத்ரதாரனால் சொல்லப்படுகிறது. வஸந்தோத்ஸவமென்பது மந்மதனை உத்தேசித்து வஸந்த காலத்தில் ச்ருங்காரிகள் கோலாஹலமாய் நடத்தும் கொண்டாட்டம். ப்ரபோத சந்த்ரோதய நாடகத்தில் இங்குப்போலவே மந்மதனும் ரதியும் முதல் பாத்ரங்களாக ப்ரவேசித்தாலும், அந்தக் காலத்தில் மந்மதோத்ஸவம் நடந்து கொண்டிருப்பதாக வர்ணிக்கப்படவில்லை. இரண்டாவது அங்கத்தில் அந்த நாடகத்தில் ‘ நீசவா [illegible] க்ஷவா:’ என்று மந்மதோத்ஸவ மென்கிற சப்தம் மட்டும் உபயோகப்படுத்தப்பட்டது. ரத்நாவளி யென்கிற ப்ராசீந நாடகம், நாடக லக்ஷணங்களைச் சொல்லும் தசரூபகம் முதலிய ப்ராசீநமான லக்ஷண க்ரந்தங்களில் அடிக்கடி உதாஹரிக்கப்

150

படுகிறது. தச ரூபகத்தில் அநேக உதாஹரணங்கள் ரத்நாவளி நாடகத்தி லிருந்தே எடுக்கப்பட்டிருக்கிற தென்பது ப்ரஸித்தம். அந்த நாடகத்தில் ஆரம்பத்தில் மந்மதோத்ஸவம் நடந்துகொண்டிருக்கிறதாகச் சொல்லி, அந்த உத்ஸவம் விசேஷமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள வர்ணந ரீதியானது சில அம்சங்களில் இங்கேயும் ஸ்வாமியால் அநுஸரிக்கப் படுகிறதென்று காட்டுவோம்.

அந்த நாடகத்தில் மந்மதன் நாடகபாத்ர மல்லன். அப்படி யிருந்தும், மந்மதோத்ஸவம் வர்ணிக்கப்படுகிறது. அந்த உத்ஸவம் மந்மதன் பேர் கொண்டதானாலும், தனக்குத்தான் அந்த உத்ஸவம் நடக்கிறது என்று அங்கே ராஜா சொல்லுகிறார். தனக்குத் தான் அந்தக் கோலாஹலம் நடக்கிற தென்று சொல்லுகிறான் வஸந்தகன் என்கிற விதூஷகன். “ நாமா பரம் காம: காமோ வைஸ்யம் மம வசந்த நேர் மஹாநுத்ஸவ: ” என்பது ராஜாவின் வார்த்தை. [‘மந்மதோத்ஸவ மென்கிற பெயரினால் மந்மதனுக்குப் பேருக்கு ஸந்தோஷ மிருக்கட்டும். வாஸ்தவத்தில் எனக்காகத்தான் இந்த உயர்ந்த உத்ஸவம் நடக்கிற தென்று நான் நினைக்கிறேன்’]. இப்படிக்கு அரசன் சொல்ல, விதூஷகன் ப்ராஹ்மண வடுவான தனக்குத் தான் அந்த உத்ஸவ மென்றும், வஸந் தக னென்று தன் பெயரானதால் வஸந்தோத்ஸவம் தனதேயென்றும் சொல் லுகிறான். மந்மதனும் வஸந்தனும் பாத்ரமாக வரும்பொழுது பிறர் அந்த உத்ஸவத்தைத் தங்களுடைய தென்று பாத்யங் கொண்டாட இடமேயில்லை. மந்மதாதிகள் ப்ரவேசிக்கையில் வஸந்தோத்ஸவத்துடன் அவர்கள் ப்ரவே சிப்பதாகக் காட்டுவது அழகு என்பது ஸ்வாமி திருவுள்ளம். ‘காமோ வஸ ந்தஸ்ய ஸஹாய:’ என்று கவிஸார்வ பௌமனும் கூறிப்போந்தனர். காமனை முதல் பாத்ரமாகக் காட்டுவது அழகு. ‘யாரால் பலாத்காரமாய் ஏவப்பட்டு மநுஷ்யன் பாபத்தை ஆசரிக்கிறான்?’ என்கிற அர்ஜுநன் கேள்விக்கு ‘காம ஏஷ க்ரோத ஏஷ:’ என்று பகவான் பதில் சொல்லுகிறார். அவனைத் தான் சத்ருவென்று அறியவேணும். காமனே தனக்குத் தடை வருகையில் கோபமாக மாறுகிறா னென்றும் தெரிவிக்கிறார். சேதநர்களை ஸம்ஸாரத்தி லிருந்து விடுவித்துக் கரை யேற்றவேணு மென்று பகவான் யத்நப்பட்டுக் கொண்டிருக்க, மந்மதன் அவருக்கு விரோதியாக ஜநங்களை ஸம்ஸாரத்தில் மேலும் மேலும் அழுந்தச் செய்கிறான். அவருக்கு ஐந்தாயுதங்கள் இருப்பன போல் இவனுக்கும் ஐந்து பாணங்கள். அவர் எப்படி ஸ்ருஷ்டிக்குக் கார ணமோ அப்படியே காமனால் ஸ்ருஷ்டி நடந்துவருகிறதென்பதும் ப்ரஸித்தம். ஈச்வர ஸ்ருஷ்டி அப்ரத்யக்ஷம், காமன் ஸ்ருஷ்டி ப்ரத்யக்ஷம். இவ்விதமாகக் காமனுடைய பெருமை நாலாவது அங்கத்தில் விஸ்தரிக்கப்படுகிறது. இவன்

ப்ரவேசிக்கையிலேயே அதிகோபத்துடன் ப்ரவேசிக்கிறான். இதனால் பகவான் கீதையில் உரைத்தபடி, காமமேதான் க்ரோதமென்னும் அவஸ்தையை அடைகிறது என்றும் ஸூசிக்கப்படுகிறது. காமன் போதையுடன் வருகிறான்; அவனை வஸந்தன் கை கொடுத்து நடத்தி வருகிறான். வஸந்த காலந்தான் காமத்திற்கு அதிகமாகக் கை கொடுக்கிறதென்று பாவம்.

முதலில் ஸூத்ரதாரனைப் பாத குல பாம்ஸநனென்று தூஷிக்கிறான். ஸாதுக்களைக் குலத்தைக் கெடுப்பவர்களென்று துஷ்டர்களான ஸஹோதரர்கள் தூஷிப்பது ஸஹஜம். விவேகனுடைய ஜயத்தைச் சொன்னதனால் ஸூத்ரதாரன் பேரில் கோபம். 'குலபாம்ஸந' என்கிற வார்த்தையினால் ஸ்ரீ ராமனுடைய ஜயத்தையும் விவேகத்தையும் உரைத்த ஸாத்விகனான விபீஷணனைக் காமமயனான ராவணன் 'த்வாம் து திக் குலபாம்ஸநம்' என்று தூஷித்த வார்த்தை ஜ்ஞாபகப்படுத்தப் படுகிறது. அடுத்த ச்லோகத்தில் 'விவேகன் எந்தத் திக்கைச் சரணமடைவான்?' என்று காமன் கேட்கிறான். விபீஷணன் சரணத்தைத் தேடிப் போனது போல் விவேகனுக்குச் சரண மகப்படாதென்று அங்கே த்வநிக்கிறது. காமனும் விவேகனும் ஸஹோதரர்கள். அதில் காமன் முன் பிறந்தவன்; விவேகன் பின் பிறந்தவன். காமத்தைப் பாதிப்பது விவேகம். பாதிக்கப் படும் ஜ்ஞானம் முற்பட்டது; பாதிக்கும் ஜ்ஞானம் பிற்பட்டது. விபீஷணனைப் போல் விவேகனும் தம்பி. விவேகன் ப்ரவேசிக்கும் ஸமயத்தில் அவன் விஷ்ணு பதத்தை அடைகிறான் என்று பின்பு காமனால் சொல்லப்படுகிறது. அங்கேயும் விபீஷண வ்ருத்தாந்தம் ஸ்மரிப்பிக்கப்படுகிறது. 'விஷ்ணு பத' மென்பது ஆகாசத்தையும் ராமன் திருவடியையும் சொல்லும். முதலில் ஆகாசத்தை யடைந்து அங்கிருந்து திருவடியை யடைந்த கதை நன்றாய்க் காட்டப்படுகிறது.

“ உத்தம்ஸித ஶ்ரீகலஜு ஹூ ஶ்ருதா அாவஹாஜாம்
தர ஸ ஹ்ருதய ஶ்ருக்ஷ்ய தாவ ஸ்வைஹிதெ |
குலவுய நய நா நாம் கமணிதெ ஞா அநாஸெ
ஶரணயதா விவெகஃ காஷ்டிஸங்க்ஷிபீகஃ ॥ ”

இந்த ச்லோகத்தின் அழகு பரிச்சேதிக்க ஒண்ணாது. விவேகனை ஜயிப்பதற்குக் காமனுடைய வில் வேண்டுமா? காமன் தன் வில்லை வளைக்க வேண்டுமா? 'ஹீ ஹூ ஸ்ரீ ஸுப்ருஜ்ரெர ஸ ஸபல' என்று நான்காவது அங்கத்தின் ஆரம்பத்தில் காமனுடைய வார்த்தை. பயத்தையே ஸ்வபாவமாகவுடைய பலமில்லாத ஸ்த்ரீகள் காமனுடைய பலம். ஸ்த்ரீகளுடைய வில்லைப் போன்ற வடிவுள்ள அழகிய புருவக்கொடியைக் காமனுடைய வில்லிற்கு

152

உவமையாகச் சொல்வர் கவிகள். காமனுடைய ஸைந்யத்தில் சேர்ந்த அழகிய ஸ்த்ரீகளின் காம தநுஸ்ஸை பொத்த புருவக்கொடியைக் கொஞ்சம் வணக்கினால்போதாதா விவேகனை இன்ன திக்கில் ஓடுவதென்று தெரியாமல் திண்டாடித் தலைவிரிகோலமாய் ஓடும்படி செய்ய ? 'ஸாநமித' என்பதற்குப் பயத்தினால் அதாவது காதர ஸ்வபாவத்தினால் வணக்கப்படுகிறது புருவம் என்றும் கொள்ளலாம். 'ஸா' என்பது பயத்தையும் சொல்லும்; அதை அவ்யயமாகக் கொண்டு கொஞ்சம் வளைத்தது என்பதையும் சொல்லும். மந்மத ஸைநிகர்களின் வில்லை முழுவதும் வளைக்கவேண்டியது கூட அவச்யமில்லை; கொஞ்சம் வளைத்தால் போதும் விவேகத்தை விரட்ட என்பது பாவம். அவர்கள் பய ஸ்வபாவத்தால் வணங்குவது கூடப் போதும் விவேகனைத் தோற்கடிக்க என்றும் பாவம். அவர்கள் பய சேஷ்டைகூட விவேகத்தை ஜயிக்கும். அவர்களுடைய ப்ருகுடிக்கு (அதாவது புருவ நெறிப்புக்கு) விவேகன் தாஸனாவான் என்றும் பாவம். அந்தப் புருவ வில்லிலிருந்து எந்த அஸ்த்ரம் விவேகன் பேரில் எறியப்படுகிறதென்றால், அவர்களுடைய புருவத்தில் ஸம்பந்தப்பட்டுள்ள கண்ணிலிருந்து எறியும் பார்வைதான். அந்த அஸ்த்ரத்தில் சொல்லவொண்ணா ஸ்நேஹம் என்கிற தைலம் பூசப்பட்டிருக்கிறது. அவர்கள் கண்களில் கருநெய்தல் புஷ்பம்போல் கறுப்பான விழிகள் இருக்கின்றன. இதனால் அஸ்த்ரத்தின் கறுப்பு வர்ணம் ஸூசிக்கப்படுகிறது. பார்வையாகிய அஸ்த்ரம் வக்ரமானது. வக்ரமாயும் கறுப்பாயும் ஸ்நேஹ தைலம் பூசினதாயுமுள்ள அஸ்த்ரம் எறியப்பட்டு வேகமாய் வரும் பொழுது எதிரிகள் நடுங்கி ஓடுவார்களன்றோ? இந்த அஸ்த்ரத்துக்கு இலக்கு எது என்றால், சஞ்சலமாய் ஆடிக்கொண்டே இருக்கும் ஹ்ருதயங்கள். சலமான லக்ஷ்யத்தில் பாணம் தைப்பது வில்லாளியின் உத்கர்ஷம் என்பதைச் சாகுந்தளத்தால் அறியலாம். ஆடாமல் ஸ்திரமாயுள்ள இலக்கின் பேரில் அம்பெறிவது ஸுலபம். இவர்கள் நிரம்பவும் ஸமர்த்தர்களானதால் சஞ்சலமான மநஸ்ஸுக்களை இலக்கு வைத்து அம்பெறிகிறார்கள். இப்படி அம்பு எறியப்படும் பொழுது, இன்ன திக்கில்தான் ஓடலாம் என்றே விவேகனுக்கும் புலப்படாமலிருக்க, மஹாராஜாவான மஹா மோஹனை அவன் ஜயிக்க இடமெங்கே?

வஸந்தனால் அப்பொழுது நடந்துகொண்டிருக்கும் மந்மதோத்ஸவம் வர்ணிக்கப்படுகிறது. அந்த மஹோத்ஸவம் மந்மதனுடையதே என்று வஸந்தன் சொல்லுகிறான். ரத்நாவளி நாடகத்தில் வஸந்தகன் என்கிற விதூஷகன் அந்த உத்ஸவம் தன்னுடையது என்று சொல்லுவது போல் இங்கே வஸந்தன் சொல்லுகிறதில்லை. 'வெக்ஷஸ்வ வெக்ஷஸ்வ தாவஸவஷ்ரீ உய
உத்தகாவிநீஜநஸ்வயம் ஸுஹமரஹிதபாரம் மகஜநுவ வாஹ நரதஸ்ஸா மஸஜநஜ

ந்ருத்யத்பௌராங்கநாஜநஸ்ய ஸஂஜாத: ப்ரகீர்ணபடவாஸபஂஜபிஂஜரிதஸமஸ்த ஜாலஸ்ய ஸஶ்ரீகதாம் உத்தநமஹோத்ஸவஸ்ய’ என்று ரத்நாவளியில் வஸந்தகனுடைய வர்ணநம். ‘கீர்ணை: பிஷ்டாதகௌகை: க்ருததிவஸமுகை: குங்குமக்ஷோதகௌரை: ஹேமாலங்காரபாபி: பரநமிதஶிரோபி: ஶேகரை: கைங்கிராதை:’ என்றும், ‘தாராயந்த்ரவிமுக்தஸந்ததபய:பூரப்லுதே ஸர்வத: ஸத்ய: ஸாந்த்ரவிமர்தகர்தமக்ருதக்ரீடே க்ஷணம் ப்ராங்கணே’ என்றும் அரசன் வர்ணநம். இவ்வர்ணநம் அந்த ரீதியைச் சில அம்சங்களில் ஒத்திருந்தாலும் இது மிகவும் அழகு.

அஸாவேஷ த்ரதாராஹஸ்தகஹஸ்தவ்யாஜ்ஜீவிநோஜ்ஜ்வலா: க்ரீடந்த்யத்ர ஹிரண்மயாநி ஜயத ஶ்ருங்காணி ஶ்ருங்காரிண: । தத்வம் மீகரயந்த்ரயந்த்ரண க்ஷரத் தத்க்ஷரத்தஸ்திகா கஸ்தூரீவரிவாஹ ஜைவாதிஜம்பால ஜாம்பூநத ஜ்வாலா கா: ।

ரத்நாவளியில் கைங்கிராதர்கள் என்று காமிகளைச் சொல்லியிருக்கிறது; இங்கே அவர்களையே ச்ருங்காரிகளென்று ஸம்போதமானதும் ச்ருங்கங்களோடு அழகாய் ப்ராஸமாய்ச் சேர்வதுமான சப்தம் ப்ரயோகிக்கப்பட்டது. அங்கே ‘கர்தம’ சப்தத்தால் சேற்றைச் சொன்னதற்குப் பதிலாக இங்கே ‘ஜம்பால’ சப்தம். லம்பமான (அதாவது தொங்கிக்கொண்டிருக்கிற) தலைமயிராகிய அங்கங்களைச் சொல்லும் லம்பாளக சப்தத்தோடு ஜம்பால சப்தம் அழகாகச் சேருவதை யிட்டு அதன் ப்ரயோகம். பொன் கலன்களால் அலங்கரிக்கப் பட்டிருக்கிறார் காமிகள் என்று அங்கே. காமிகள் தலையில் பொன்மயமான ச்ருங்கங்களை (அதாவது கொம்புகளைச்) செருகிக்கொண்டு விளையாடுகிறார்கள் என்று இங்கே. ச்ருங்கமென்று பீச்சாங்குழலையும் சொல்லலாம். ரகு வம்சத்தில் பதினாறவது ஸர்க்கத்தில் ‘வர்ணோதகை: காஞ்சநஶ்ருங்கமுக்தை:’ என்று சொன்னதை அநுஸரித்துத் தங்கப் பீச்சாங்குழல்கள் என்று அர்த்தங் கொள்ளலாம். தலையில் பூவின் சுமை இருப்பது இரண்டிடத்திலும் துல்யம். ஸ்ரீரங்கத்தில் செங்கழுநீர்ப் புஷ்பம் விசேஷமாய் உள்ளது. கொள்ளிடம் காவேரி இவைகளின் நடுவிலுள்ள மடுக்களில் அந்தப் புஷ்பங்கள் இருக்கக்கூடியவை. அந்தப் புஷ்பங்களில் உள்ள தேனுக்கு ஆசைப்பட்டுக் குடுமியிலுள்ள புஷ்பங்களில் வண்டுகள் உட்கார்ந்துகொண்டு ரீங்காரஞ் செய்கின்றன. துருத்திகளிலிருந்து ஜலத்தைப் பீச்சுவது இரண்டிடத்திலும் ஸமம். யுவதிகளுடைய அழகிய கைகளாகிய யந்த்ரத்தினால் தாராயந்த்ரம் என்னும் துருத்தியை அழுத்தி, அதிலுள்ள கஸ்தூரி கலந்த வாஸனை ஜலம், கூத்தாடும் காமிகள் தலைமேல்

பீச்சப்பட்டு, அவர்கள் குடுமிகள் கலைந்து கஸ்தூரிச் சேற்றுடன் நெற்றியில் தொங்குகிறதென்று இங்கே வர்ணனம். ஸ்ரீரங்கத்தில் பெரிய பெருமாளை உத்தேசித்துக் கஸ்தூரி அதிகமாயிருக்கும். கஸ்தூரி ரங்கனுடைய ரங்கத்தில் கூத்தாடுபவர்களுக்குக் கஸ்தூரி படிவது உசிதம். தலையில் கறுப்பான மயிர்களில் புஷ்பத் தேனுக்கு ஆசைப்பட்டுக் கறுப்பான வண்டுகள் அடைகின்றன. கருமயிர்களில் கஸ்தூரிக் குழம்பு படிந்து அவை தொங்குகின்றன. இவர்கள் கூத்தாடும்பொழுது தலையிலுள்ள வண்டுகளும் பாடிக்கொண்டு சுழன்றுவரும். யுவதிகள் தங்கள் கைகளால் அழுத்தி ஜலத்தைப் பீச்சித் தலையில் விழும் கஸ்தூரிச் சேற்றின் ஜலம் காமிகளுக்கு நிரம்பவும் பஹுமானம். பீச்சாங்குழல் யந்த்ரத்தைவிட அதை யழுத்தும் யுவதியின் கை யந்த்ரம் அழகு என்று 'காயந்த்ர' சப்தத்தின் பாவம். ரத்நாவளியில் துருத்தி ஜலத்தால் தரையெல்லாம் சேறாகி விட்டதென்று சொல்லப்படுகிறது. இங்கே துருத்தியிலுள்ள கஸ்தூரி ஜலத்தால் மயிரில் கஸ்தூரிச்சேறு படிகிறதென்று சொல்லப்படுகிறது. இரண்டு வர்ணனங்களின் அழகுகளை ரஸிகர்கள் அநுபவித்துக் கொள்ள வேணும்.

வஸந்தகால மானபடியால் காமத்துக்கு உத்தீபநமான தென்றற் காற்றுடன் உபய காவேரீ மத்யத்திலுள்ள நந்தந வநத்தைப் பழிக்கும் குளிர்ந்து இருண்ட சோலைகளில் இந்த மஹோத்ஸவம் நடக்கிறது. இத்தனை உத்தீபந ஸாமக்ரி பலமிருக்கையில் பாபியான விவேகன் தொலைந்தான் என்று காமன் நிச்சயிக்கிறான். இரு பக்ஷமும் காவேரி யிருப்பதால், அக் காவேரி ஒரு ச்லோகத்தால் வர்ணிக்கப்படுகிறது. காவேரியினிடத்தில் ஸ்வாமிக்கு விசேஷமான பஹுமதிப்பும் ப்ரீதியும். காவேரியை விட்டுப் பிரிந்து சில காலம் கழித்துத் திரும்பி வரும்பொழுது, 'காவேரியைப் பார்க்காமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த கண்கள் அகஸ்த்யர் ஸமுத்ரத்தைப் பாநம் செய்ததுபோல் உறிஞ்சி விடுகின்றன' என்று ஆறுவது அங்கத்தில் கூறுகிறார். ஹம்ஸ ஸந்தேசத்தில் இரண்டு ச்லோகங்களால் காவேரி வர்ணிக்கப்படுகிறது. பாதுகா ஸஹஸ்ரம் முடிவில், மறுபடியும், கர்ப்ப வாஸத்தைத் தொலைக்கும் காவேரி புளிநத்தில் பெருமாள் திருவடி அடையும் வரையில் வஸிக்க வேணுமென்கிற தீவ்ரமான மநோரதத்தைக் காட்டுகிறார்.

'உஷ்ணாஸ்ரூஜவாபிகாஷஹயதொ ரொமொஜாதொஜாஷுஸ
ஜொதஸூஞ்ரதஸாரணிமுதகாஞ்தஸூஅடிகஷூாவவாம்।
வெ்ரூஜொஉவயுலியுஜெதகவரிமெஸவாயுிதாஷநூஹம்
வஸெஷூ வவஷாதஹஹஷியுநஷொஸாம் கவெராதஜாம்॥'

155

காவேரியின் இருகரைகளையும் மோதி, அணைக்கட்டுகள் கட்டப்பட்டு, அந்த அணைக்கட்டினால் தேக்கித் திரும்பும் ஜலங்கள் அநேக கால்வாய்கள் வழியாய் (கரைகளுக்குப் பக்கத்திலுள்ள) நன்செய் பூமிகளுக்குத்தானே வந்து வயல்களில் நிரம்பி நிற்கின்றன. அணைக்கட்டு கட்டி, அநேக கால்கள் ஏற்படுத்தி, அவற்றின் வழியாய்க் கரையின் ஸமீபத்திலுள்ள பூமிகளுக்கு ஸ்வச்சந்தமாய் ஜலம் பாய்ந்து நிரம்புவதைப் பார்த்து ஸ்வாமிக்கு ஹர்ஷமும் ஆச்சர்யமும் உண்டாகின்றன. வானம் பார்த்த பூமிகளையுடைய தம்முடைய தேசத்தில் சேஷ லோக பர்யந்தம் பெரிய கிணறுகளை வெட்டிக் கபிலை மாடுகளைக் கொண்டு ஜலத்தை இறைத்துக் கழனிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சும் ச்ரமத்தை நன்றாயறிந்த ஸ்வாமிக்கு, ஜலம் தானாகவே நதியிலிருந்து பாய்வதைக் கண்டு ஆச்சர்யம். இரண்டு கரைகளையும் மோதி ப்ரவாஹம் போகிறது என்று சொல்வதைவிட, இருகரையும் சேர்த்து அணைக்கட்டினால் ஜலத்தைத் தேக்கி வாய்க்கால்கள் வழியாய் ப்ரவாஹம் பாய்கிறது என்று சொல்வது உசிதம். காவேரிக் கரையிலுள்ள மடுக்களில் தாமரைகள் பூத்துக் கோவையாக இருக்கின்றன. காவேரி ஜலத்தில் விளையாட்டாக சோழ ஸ்த்ரீகள் தங்களுடைய நீண்ட கூந்தல்களை அவிழ்த்துக்கொண்டு ஸ்நாநம் செய்கிறார்கள். அவர்களுடைய நீண்ட கூந்தல்கள் காவேரியில் பாசிக் கொத்துகள் படர்ந்தது போலிருக்கின்றன. காவேரியிலேயே தாமரை பூத்திருக்கிறதென்று அர்த்தங் கொண்டு, பாசியுள்ள ஜலத்தில் தாமரைகள் பூப்பது ஸஹஜமாதலால், கூந்தல்கள் பாசிக் கொத்துக்கு உவமையாகும் என்றும் சொல்லலாம். பாசியோடு சேர்ந்திருந்தாலும் தாமரைப் பூவின் அழகு குறையாது என்றல்லவோ கவி ஸார்வபௌமன் மொழி? கரு வண்டுகள் அடைந்திருப்பதனால் மட்டும் தாமரை சோபிக்கிறதென் பதில்லை; பாசி ஸம்பந்தத்தாலும் அது சோபிக்கிறது என்பது குமார ஸம்பவத்தின் கூற்று. காவேரியில் அன்னப் பறவைகள் ஜோடி ஜோடியாக மிதந்து வருகின்றன. அந்த ஹம்ஸ மிதுநங்களைப் பார்த்தால் காவேரி பென்னும் பெண், தன் வெண்மையான பற்கள் வெளித் தெரியும்படி நகைக்கிறாள் போலும் என்று உல்லேகம். சோள தேசத்து ஸ்த்ரீகளுக்குத் தங்களுடைய கூந்தல்கள் நீண்டும் வக்ரமாயும் அழகாயும் இருப்பதனால், அதில் அபிமாந விசேஷத்தால் மிகுந்த கர்வத்துடன் அவர்கள் காவேரி ஜலத்தில் கூந்தலை விரிய விடும்பொழுது, வடமேற்குத் தேசத்தில் பிறந்த காவேரி சோளஸ்த்ரீகளின் கர்வத்தைப் பார்த்துச் சிரிக்கிறாள் போலும். காவேரி பிறந்த தேசத்தில் அந்தக் காலத்தில் சோள ஸ்த்ரீகளைப்போல் அங்குள்ள ஸ்த்ரீகளுக்கு அவ்வளவு நாகரீகமும் கர்வாதிகளும் இருந்திருக்கமாட்டா. கூந்தல்களை விரித்ததால் பாசியில்லாத காவேரிக்குப் பாசி பிடித்ததுதான் லாபம் என்று காவேரியின் நகைப்பு. கவேரனுடைய பெண் என்று சொன்னதனால், காவேரி, மேல் தேசத்தில் பிறந்த பெண் என்பது ஸூசிக்கப்படுகிறது.

வஸந்த காலத்தில் காமனுக்கு ஸஹஜமாய் அதிகமான வீர்யம். வஸந்த காலம் முடிந்ததனால் காமனுடைய வீர்யம் குறைந்தாலும் ஸ்த்ரீகளுடைய அழகிய கூந்தல்களில் காமனுடைய பலம் உத்தீபிதமாகிறது என்று காளிதாஸன் சொல்லுகிறார். ஸ்நாநம் பண்ணின பிறகு கொஞ்சம் ஈரத்துடன் விரிய விடப்பட்டிருக்கும் கூந்தல்களில், தூபங்களின் வாஸனையைப் பரவவிட்டுப் பிறகு ஆற்றிக்கொள்ளும் அவஸரத்திலும், மாலை வேளையில் மல்லிகை ஜாதி முதலிய அப்பொழுதலர்ந்த புஷ்பங்களைத் தரிக்கும் அவஸரத்திலும், நாயகர்கள் மனம் கவரப்படும் என்று அவரால் சொல்லப்பட்டிருக்கிறது. வஸந்த காலம் போய்விட்டாலும் அங்கனைகளின் கேசங்களின் பலம் தனக்கிருக்கிறதென்று காமன் இங்கே அந்த ப்ரஸ்தாவம் செய்ததாகவும் கொள்ளலாம்.

காமன் மிக தைரியமாய் வீரப்பேச்சுப் பேசினாலும், பெண்பிள்ளையாகிய ரதி, விரக்தி சமம் தமம் முதலிய மந்த்ரிகளால் காக்கப்படும் விவேகன் கோட்டைக்குள் நுழையவே முடியாதென்று நடுங்குகிறாள். விரக்தியை நினைக்க ரதி உயிர் போய்விடுமென்று நடுங்குகிறாள். காமன், 'பயப்படாதே! ப்ரபலமான எதிரி கிடைத்ததனால் நம்முடைய முழு பலத்தையும் செலுத்தி, ஜயிப்பதற்கு அவஸரம் நேர்ந்ததென்று நாம் ஸந்தோஷிக்க வேணும். அழகிய கரும்பினால் அமைந்தது என்னுடைய வில். வண்டுகளின் தொடர்ச்சியால் அமைந்தது என்னுடைய வில்லின் நாண் கயிறு. நானெறியும் பாணங்கள் புஷ்பங்கள். இப்படிக்கிருந்தும், மேரு பர்வதத்தை வில்லாகவும் காற்றையும் நெருப்பையும் பாணமாகவுமுடைய முக்கண்ணப்பனும் என் உத்தர்வை மீற வல்லவரா? கரும்பு, வளைத்தால் ஒடியத்தக்கது; துர்ப்பலமானது. வண்டுகள் கோவையாயிருந்தாலும் ஒன்றுக்கொன்று பிரிந்ததே. வண்டுகளான கயிறு ஸுலபமாய் அறுந்துவிடும். புஷ்பத்தைத் தூர எறியமுடியாது; எறியப்பட்டு மேலே பட்டாலும் காயமுண்டாக்காது. எனக்கு எதிரியோ ரௌத்ர ஸ்வரூபனான ருத்ரன் அவருடைய மேரு தநுஸ்ஸானது என்னுடைய புஷ்ப தநுஸ்ஸால் ஜயிக்கப்படும். சண்டமாருதம் போன்ற அவருடைய காற்று, என்னுடைய தோழன் வஸந்தனுடைய தென்றல் காற்றுக்கு முன் நிற்கமாட்டாது. என்னுடைய புஷ்பாஸ்த்ரத்தால் அவருடைய நெருப்பாயுதம் தூரத்தப்படும்' என்று தைர்யம் சொல்லுகிறான். "புஷ்பராசியில் அக்நியை எறிவதுபோல ம்ருதுவான மானின் சரீரத்தில் அஸ்த்ரத்தை எறிய வேண்டாம்" என்று துஷ்யந்தனைப் பார்த்து ரிஷிகள் ப்ரார்த்திக்கிறார்கள். இங்கே மன்மதனுடைய புஷ்பாஸ்த்ரம், அக்நி அஸ்த்ரத்தையும் தொலைக்க வல்லது. நான்காவது அங்கத்தின் முதலில் காமனுக்குத் தன்னுடைய வில் முதலியவை நுட்பமாயிருந்தாலும், 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்றபடி த்ருணமே அஸ்த்ரமாக ஆயிற்று;

தன் வலிமையினால் சூலாயுதமுடையவரையும் ஜயிக்கத் திறமையுண்டு என்று அவன் பேசுகிறான். வஸந்தன் காமனுடைய பெருமையையும் பலத்தையும் கொண்டாடுகிறான். காமனே அதைப் பேசினால் தற்புகழ்ச்சியாகுமென்று தோழன் பேசுகிறான். ருத்ரன் ஒருவரை மட்டும் ஜயித்ததாகக் காமன் மிக்க விநயத்தினால் சொன்னான். அது சொன்னது போதாது. மூன்று மூர்த்திகளில் அவனுக்கு வசப்படாதவரில்லை. அவனுக்கு வசப்படுவதென்றால் அவரவர்களுடைய காந்தா ஜநத்துக்கு வசப்படுவது தான். அவர்கள் காமனுடைய ஸைந்யம்; தன் ஸேனைக்கு வசப்படுவது தனக்கு வசப்படுவது தானே.

ப்ரஹ்ம தேவனுக்கு நான்கு முகங்கள். நான்கு வேதங்களையும் நான்கு முகங்களால் எப்பொழுதும் அவர் அத்யயநம் செய்வர். எந்த வேதத்தை முதலில் சொல்லுவதென்று சண்டை வரக்கூடும். முதல் மர்யாதைக்குத்தானே தேவாலயங்களில் அடிக்கடி கலஹம் வருகிறது. வேதங்களுக்குள் முன்பின் இல்லாமல் ஸமமாய் உச்சரிப்பதற்காக நான்கு முகங்களை அவர் வைத்துக்கொண்டிருக்கிறார் போலும். வேதங்களைச் சப்தித்துக் கொண்டிருக்கும் வாய்களிலேயே ஸரஸ்வதியை அவர் ஸர்வ காலமும் வஹிக்கிறார். அத்யயநம் செய்யும் காலத்திலும் அவர் தமது நாயகியை விடுகிறதில்லை. எந்தக் கருவியால் வேதம் கோஷிக்கப்படுகிறதோ அந்த இடத்திலேயே அவளையும் சுமக்கிறார். இவர் லோகத்திற்கு முதல்வர். இவர் ஆசாரம் இப்படி இருக்கிறது. விச்வத்திற்கு ஆசார்யன் ஸர்வஜ்ஞனான ருத்ரன். அவருடைய ரௌத்ரத் தன்மையும் ஆண்மையும், பாதி பெண்பாலாக மாறி விட்டன காமன் ப்ரபாவத்தால். அப்படி யானதால் ருத்ரன் சிவனானார். அவருடைய வாம பாகம் அவளால் வாமம் (அதாவது அழகு) ஆயிற்று. ருத்ரனுடைய பைரவமான ஆண் தேஹத்தின் இடது பாதி அருமையான பெண்ணாக அத்யந்தம் வேற்றுமையை அடைந்துவிட்டது. நேர் எதிர்த்தட்டான மாறுதலை 'விவர்த்தம்' என்று சொல்வார்கள். ஸஜாதீயமான மாறுதலைப் 'பரிணாமம்' என்பர். ஆண் பெண்ணாவது மநுஷ்யர்களுக்கு சக்யமல்ல; கூடியமட்டும் பெண்ணை ஆணாக்க நவீந ஸாமர்த்யங்களால் முயற்சி செய்தும் கொஞ்சமேனும் பலிக்கவில்லை. சிகண்டியைப் போன்றவர் விஷயத்தில் ஈச்வரனால் பால் மாறலாம். இங்கே காமனால் ஈச்வரனுடைய பால் மாறி விடுகிறது. 'வரதநு' என்பது பெண்ணைச் சொல்லுவதுடன் 'உத்க்ருஷ்டமான சரீரம்' என்பதையும் சொல்லும். இடது பாகம் சிவனுடைய உயர்ந்த பாகம் என்றும் காட்டப்படுகின்றது. இப்படியே ஆங்கில பாஷையில் வ்யவஹாரம். அந்தப் பாகத்தால் சிவர் சிவரானார். அந்த உயர்ந்த பாகமில்லாவிட்டால் அவர் பைரவர் அல்லது ருத்ரரே.

இரண்டு உடம்பும் ஒன்றாகவேண்டும் என்றல்லவோ காமிகளின் ஆசை. இரண்டு மூர்த்திகளும் தங்கள் தங்கள் தேவஜாதியான பார்யைக்கு வசப்பட்டார்கள். வேதாப்யாஸம் எப்பொழுதும் செய்துகொண்டு சாந்தராயும் ஜடராயும் விஷய நாகரிகம் இல்லாதவருமான ப்ரஹ்மாவை வசப்படுத்தினது பெரிதல்ல. பைரவருத்ர மூர்த்தியைப் பாதிப் பெண்ணாக்கினதும் பெரிதல்ல. பரதத்வமான கண்ணன், பார்யையல்லாதவரும் தேவஜாதியார் அல்லாதவரும் மநுஷ்யரில் க்ஷத்ரிய ஜாதியுமல்லாத வருமான ஆய்ச்சியர் வசமானான். அஜிதன் என்னால் ஜயிக்கப்பட்டான்; வேறு ஸாமாந்ய ஜநங்கள் காமசரங்களால் ஏன் வருந்தமாட்டார்கள் ?

இப்படி வஸந்தன் காமனைத் துதிசெய்ய, காமன் உச்சி மகிழ்ந்து 'நன்று நன்று' என்று வஸந்தனைக் கொண்டாடுகிறான். 'ஏ வஸந்தா! நீ புஷ்ப பாணங்களை எனக்குக் கொடுக்கக் கொடுக்க நான் ப்ரபஞ்சம் முழுவதையும் பெண்கள் காலில் விழச்செய்வேன். நான் விபக்ஷனாக (அதாவது விரோதியாக) எதிர் நிற்கையில் விவேகன் எப்படி நிற்பான்?' இங்கே விபக்ஷன் என்பதற்கு 'சிற கொடிந்து' என்றும், 'ஸம்ஸ்திதன்' என்பதற்கு 'முடிந்தவ' னென்றும் விபரீதமான அர்த்தம் அவலப் பொருளில் த்வனிக்கிறது. ரதிக்குப் பயம் தெளியவில்லை. 'எதிரிகள் கொஞ்சங்கூடப் பதட்டமும் இல்லாதவர்களன்றோ? விவேகனுக்கும் சமத்திற்கும் தமத்திற்கும் பாபரப்பேது? அஜாக்ரதையேது? அறியாமையேது? இந்தத் தோஷமெல்லாம் இல்லாமைதானே எதிரிகளின் ஸ்வரூபம். இவையெல்லாம் நிரம்பியிருப்பதுதானே நம்முடைய ஸ்வரூபம்' இப்படி அர்த்தம் காட்டப்படுகிறது 'சத்ருக்கள் அப்ரமத்தர்கள்' என்பதினால். அதற்குக் காமன் 'பயப்படாதே' 'விபக்ஷனுடைய பலத்தில் உனக்குப் பக்ஷபாதம். உன்னைப்போன்ற பயந்த ஸ்த்ரீகளை நான் வில்லாக வைத்துக்கொண்டு சத்ருக்களை ஜயிப்பேன். பெண் எனக்கு வில். அவளுடைய கொஞ்சம் வணங்கிய சரீரம் வில்லாகும். அவளுடைய த்ருடமான அழகென்னும் குணம் நாண் கயிறாகும். காது வரையில் நீண்ட கண்களிலிருந்து வரும் கடைக்கண் பார்வைகள், காது வரையில் இழுக்கப்பட்ட வில்லிலிருந்து எறியும் புதிது புதிதான விசித்ர அஸ்த்ரங்களாகும். இடுப்பாகிய அவளுடம்பின் நடு விடை ஒரு முஷ்டியில் அடங்கக்கூடியது போல் வில்லின் நடுபாகமும் ஒரு பிடியில் அடங்கும். இந்தப் பெண்ணென்னும் வில்லே எனக்கு முதன்மையான வில்.' என்கிறான். பின்னும்,

ஃஸௌஹ்ரீம் விநோவயதி ஸாந்த்ரியயஃக்னோதி
வ்ரீடாம் வ்யூடஷஸ்யதி விரக்த்ர ஏவஹ்ரூதெ அ।

கர்ணாம்ருதம் கிமபி தத்க்ஷண ஹாஸினீநாம்
நாமாபி கிம் ந விகரோதி நிசம்யமானம் ॥"

'நான் அஸ்த்ரம் எறியவேண்மோ? [வில்லின் ஹூங்காரத்தினாலேயே விக்நங்களை யெல்லாம் போக்கடிக்கிறார் என்று சாகுந்தளத்தில் துஷ்யந்தனைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.] வில்லின் ஒலிகூட வேண்டியதில்லை எனக்கு தேனைப்போல் இனிமையான சொற்களையுடைய இந்த விற்களின் பெயர்கள் கர்ணாம்ருதம் போல் காதில் விழும்பொழுதே, உடையாத சிலமும் உடைந்து விடும்; சாந்தி அடிப்பட்டுப்போம்; வெட்கம் தொலையும்; வைராக்யம் மறைந்து போம். இந்த வில்லின் பேர் காதில் விழவே என்னென்ன விகாரங்கள் உண்டாகமாட்டா ? 'நாமாபி நிசம்யமானம்'; பேர் மட்டும் கேட்கப் பட்டாலும் போதும். முன் ச்லோகத்தில் உடம்பு வில்லென்றும், கண் அஸ்த்ர மென்றும் சொன்னதனால், உடம்பும் கண்ணும் பார்க்கப்படுகிறது என்று ஏற்பட்டது. 'அவளுடம்பையும் அவளையும் பார்க்க வேண்டாம்; அவளும் பார்க்க வேண்டாம்; அவள் பெயரைக் கேட்பதே போதும்' என்று இங்கே சொல்லப்படுகிறது. பெயருக்கே இவ்வளவு மஹிமை யிருக்கும்பொழுது, ரூபத்தின் மகிமைக்குக் கேட்க வேணுமா? இங்கே ஒரு கைமுதிகம். அடுத்தாப்போல் இன்னொரு கைமுதிகம் சொல்லப்படப்போகிறது. இந்த ச்லோகம் சண்ட கௌசிக நாடகத்தில் தூக்கத்தின் குணங்களை வர்ணித்திருக்கும் ச்லோகத்தின் சைலியை ஒத்திருக்கிறது. அது வருமாறு:—

"த்ருப்தம் ப்ரஸாதயதி ஸாவ்வஸமாதநோதி
ப்ரத்யங்கமஞ்ஜயதி ப்ரத்யஹவிசேஷம் ।
தோஷாநபாவஹதி கரோதி ச யாதநாவஸாநம்"

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜாசார்யரும் ஸ்ரீகண்டாசார்யரும்.

[ஸ்ரீ. உப. வித்வாந் தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்.]

(ஸஞ்சிகை 6, பக்கம் 165 தொடர்ச்சி.)

இப்படியே நாராயணாநுவாகம் ஸர்வபர வித்யோபாஸ்ய தேவதா விசேஷ நிர்ணயபர மென்றும், ஆகையால் அது தஹரவித்யா மாத்ர சேஷ பூதமல்லவென்றும் வேதார்த்தஸங்க்ரஹத்தில்,

“ யதோக்த நாராயணாநுவாகே ஸஹஸ்ர ஶீர்ஷம் தேவ' மித்யாரப்ய 'ஸ ப்ரஹ்மா ஸ ஶிவ: ஸேந்த்ர: ஸோக்ஷர: பரம: ஸ்வராட்' இதி ஸர்வஶாகாஸு பரதத்வ ப்ரதிபாதநபராணாம் அக்ஷர ஶிவ ஶம்பு பரப்ரஹ்ம பரஞ்ஜ்யோதி: பரதத்வ நாராயண பரமாத்மாதி ஶப்தாநாம் தத்தத்குணயோகேந நாராயண ஏவ வ்ருத்திம் ப்ரதிபாத்ய தஸ்ய ஸ்வரூபம் ஸத்யாநந்தம் நித்யோதிதம் நிர்விகாரம் தத் ப்ரத்யக்ஷம் ச ஶ்ருத்யா ப்ரஹ்மஶிவயோரபி இந்த்ராதிஸமாநகார்தயா தத்விபூதித்வம் ச ப்ரதிபாதிதம். இதம் ச வாக்யம் கேவலபரதத்வப்ரதிபாதநபரம். அந்யத் கிஞ்சித்வ்ருத்த்ய ந வியோஜ்யதே. ” (வேதா. ஸங்க். 255) என்று ஸாதித்திருக்கிறார். இதை ஸ்ரீகண்டர் அநுபபத்யதிகாணத்திலேயே ‘பராத்பரதாத்ஶ்வ நிரூபணம் ஸமேதம்’ என்று முக்தியைச் சொல்லி, அதற்கு உபாயமாகத் தஹரோபாஸநத்தையும், அந்த வித்யோபாஸ்ய தேவதையை ‘யஸ்ஸ்வரூபம் ய: பரஸ்ஸ மஹேஶ்வர:’ என்று மஹேச்வர சப்த வாச்யனைச் சொல்லி, அத்தேவதை எது வென்றால் ‘ருதம் ஸத்யம் பரம்ப்ரஹ்ம’ என்று விரூபாக்ஷ ரூபமானது என்றும் கூறுகிறார். ஆனபடியால் உபாஸ்ய தேவதா விசேஷ நிர்ணயம் செய்யாதவரையில் ப்ரகரணத்திற்கு ஆகாங்க்ஷா சாந்தி யுண்டாகாது; தானதுபற்றி நாராயணாநுவாகத்திற்குப் பூர்வாநுவாகத்தில் ப்ரதிபாதிதமான தஹர வித்யை தநுத்தராநுவாகமான ‘ருதம் ஸத்யம்’ என்கிற அநுவாகம் வரையில் அநுவர்த்திக்கின்றதாகும் என்பது ஸ்ரீகண்டரின் ஹ்ருதயம்.

ராமாநுஜர் இவ்விடத்தில் 'யத்வேதாதௌ ஸ்வர: ப்ரோக்த:......யஸ்ஸ பரஸ்ஸ மஹேச்வர:' என்பதால் தஹர வித்யோபாஸ்ய தேவதாவிசேஷம் அகார வாச்யனான நாராயணன் என்று தீர்மானிக்கப்பட்டு விட்டதாலும், அத்துடன் அப்ரகரணம் முடிவாய் விட்டபடியாலும் நாராயணாநுவாகத்தை உபாஸ்ய விசேஷண நிர்ணய த்வாரா தச்சேஷபூதமெனச் சொல்லவோ, அல்லது 'ருதம் ஸத்யம்' என்கிற வரையிலும் தஹர வித்யாநுவ்ருத்தி யிருப்பதாக அங்கீகரித்து, ஆகையால் தஹர வித்யா ப்ரகரண மத்யபதிதம் என்று சொல்லவோ வேண்டியதில்லை யானதாலும், நாராயணாநுவாக விஹிதமான நாராயணத்வம் ஸர்வ வித்யோபாஸ்ய தேவதையை உத்தேசித்தா என்று ஸம்சயித்துக் கொண்டு தஹர வித்யா ப்ரகரணமானதாலும், இவ்வநுவாகத்திலும் 'பத்மகோச ப்ரதீகாசம்' என்று ஹ்ருதய புண்டரீக ப்ரஸ்தாவம் இருப்பதாலும், தஹர வித்யோபாஸ்ய தேவதை நாராயணன் எனத் தெரிவித்து, தஹர வித்யா சேஷபூத மாகிறதென்று பூர்வ பக்ஷத்தை மனத்தில் நினைத்துக்கொண்டு ப்ரகரணத்தைவிட ஸர்வ பர வித்யைகளிலும் உபாஸ்யமாகச் சொல்லப்பட்ட தேவதையை அவ்வோ சப்தங்களால் நிர்த்தேசித்து, நாராயண சப்த ஸாமாநாதிகரண்யத்தால் அது நாராயணன் என்று சொல்லும் வாக்யங்கள் வெகுவாகக் காணப்படுவதால் ப்ரகரணத்தை விட வாக்யம் ப்ரபல ப்ரமாணமென வைத்து, ஸர்வ வித்யோபாஸ்ய தேவதா விசேஷ நிர்ணயத்திற்காகவே நாராயணாநுவாகம் ப்ரவ்ருத்தம் என்று ஸித்தாந்தம் செய்திருக்கிறார். இவ்விஷயம் ஸ்ரீ பாஷ்யம் லிங்க பூயஸ்த்வாதி கரணத்தில் (3-3-19) ஸ்பஷ்டம். இதனால் தஹர வித்யை 'யஸ்ஸ பரஸ்ஸ மஹேச்வர:' என்பதுடன் முடிந்து விட்டதென்று அவர் கருத்து. ஆகையால்தான் லிங்கபூயஸ்த்வாதிகரணாரம்ப பாஷ்யத்தில் தைத்திரீயே தஹரவித்யாநந்தரமேவபடிதே—'ஸஹஸ்ர சீர்ஷம் தேவம்......' என்று நாராயணாநுவாகம் தஹர வித்யை முடிந்த பின் இருப்பதாக ஸாதிக்கிறார். 'பத்மகோச ப்ரதீகாசம்' என்பதால் நாராயணாநுவாக மத்யத்தில் தஹர வித்யா ப்ரத்யபிஜ்ஞை யிருக்கிறதே யெனில், அங்கு தஹர வித்யா ப்ரஸ்தாவம் நாராயணன் ஸர்வ வித்யோபாஸ்யனானபடியால் தஹர வித்யையிலும் அவனே உபாஸ்யனென்று ஓர் வித்யா விசேஷத்தில் அதை ஸமந்வயம் செய்து காண்பித்தபடியாகு மென்பது கருத்து. இதைக் கண்டிக்கும் போது ஸ்ரீகண்டர்

"தஸ்மிந் யதந்தஸ்ததந்வேஷ்டவ்யம் இதி தஹரவாக்யோக்தஸ்ய தத³ந்வேஷ்டவ்யஸ்யேதி ஸாகாங்க்ஷத்வாத் । தஸ்மிந் விஷயாகாங்க்ஷாயாம் ய: பரஸ்ஸ மஹேச்வர இதி மஹேச்வராவதி தத³ந்வேஷணீயம் । தஸ்மிந் ஸ்வரூப விஷயாகாங்க்ஷாயாம் ருதம் ஸத்யம் இத்யாதிநா விரூபாக்ஷத்வாதி லக்ஷண

ஸமவஹிதத்வேந ஸம்ஹ்ருதம் । தத்ராநுவாகவாக்யேஷு நாராயணः ஸர்வஶப்தாதிகரணந்யாயாத் பரஶிவஸ்யைவ நாமேதீதி யுக்தம் । அத: ஸ ஸர்வஶாகாப்ரத்யயந்யாயாதிகாரஸ்ய ஸங்கோசேபி நாராயண ப்ரஹ்மணः ஸர்வாதிக்யமயுக்தம் ।'' (ஸ்ரீகண். 331)

என்று சொல்லுகிறார். இங்கு 'ஸாமாந்யேநோக்தம்' என்பதால் 'தஸ்மிந் யதந்தஸ்ததந்வேஷ்டவ்யம்' என்பதில் தேவதா விசேஷ நிர்த்தாரணம் வாரா தென்றும், 'ய: பர: ஸ மஹேச்வர:' என்பதிலிருந்தும் அந்நிர்ணயம் பிறக்கவில்லை யென்றும் 'தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய இத்யந்தம்' என்கிற வரையில் போக வேண்டியது அவச்யமாதலால் தந்மத்ய பதிதமான நாராயணாநுவாகம் தச்சேஷ பூதமாகவே யாகவேண்டும் என்றும் அவர் கருதுகிறார். 'தத்ப்ரஹ்மப்ரதிபாத்யாகாங்க்ஷாயாம்' என்கிற பாகத்தால் தஹர வித்யா ப்ரகரணம் 'ய: பர: ஸ மஹேச்வர:' என்பதுடன் ஸமாப்த மாகவில்லை யென்று அவர் நினைத்திருக்கிறாரென்பது, அவ்விடத்திய சிவார்க்கமணி தீபிகையில் 'இத்யந்தஸ்யைவ ஸந்தர்ப்பஸ்ய ப்ரக்ருதவித்யாயாம் ப்ரமேயஸமர்ப்பக இதி ப்ரகரணாநுஸந்தாநாவஸீயதே' என்பதால் த்ருடீக்ருத மாகின்றது. இவ்வாறாக 'நாராயணாநுவாகத்திற்கு ஸ்வாதந்த்ர்யேணார்த்த வர்ணநம் பண்ண வேண்டுமென்று ராமாநுஜர் சொன்னதற்கு, 'அப்படி ஸ்வாதந்த்ர்யேண சொல்லலாகாது; தஹர வித்யாநுவ்ருத்தி பின் வாக்யத்திலு மிருக்கிறபடியால் இது தஹர வித்யா மத்ய பதிதமாதலால் தஹர வித்யா சேஷமே' யென்று ஸ்ரீ கண்டர் சொல்ல வேண்டியது பொருந்து மாதலால் ராமாநுஜ க்ரந்தத்தைப் பார்த்தே ஸ்ரீ கண்ட க்ரந்தம் ப்ரவ்ருத்த மென்று ஊஹிக்க ஸரியான இடமுண்டாகிறது. இதற்கு விபரீதமாக ஸ்ரீ கண்ட க்ரந்தத்தின் பேரிலேயே ராமாநுஜருடைய கண்டந க்ரந்தம் ஏற்பட்ட தென்னில், அப்போது ராமாநுஜர் நாராயணாநுவாகம் ஸ்வதந்த்ரமாய் நிற்கின்றது என்று மாத்ரம் சொல்லாமல், தஹர வித்யை 'ய: பர: ஸ மஹேச்வர:' என்பதோடு முடிந்து விட்டதே தவிர, 'இத்யந்தம்' என்கிற வரையில் அநுவர்த்திக்கக் காரணமில்லை யென்றல்லவோ சொல்லியிருக்கவேண்டும்? தவிர நாராயணாநுவாகம் கேவல பரதத்வ ப்ரதிபாதக மென்பது ஸித்தமானதால் ததநுகுணமாக சம்பு சிவாதி சப்தங்களை ஸாமாந்ய வாசகங்களென வைத்து விசேஷத்தில் பர்யவஸாநம் சொல்லவேண்டுமே யல்லது சம்பு சிவாதி சப்தங்களை யநுஸரித்து அதை மாற்றலாகாதெனை நினைத்து, ''ந சேதம் அநுவாகவாக்யஜாதம் ஸம்ஹிதாஸம்பூர்வமந்த்ரேண நேயம் ந சேதம் அந்யமந்த்ரேண தேஷாம் நேயத்வமிதி ஸங்காயாம் வைஷம்யாத் அஹ—கேவலமேதி,'' (வெ. 256) என்று வ்யாக்யாதா சொல்வதிலிருந்தும் நாராயணாநுவாக ப்ரதிபந்நமான நாராயண பரதத்வத்திற்கு யாதொரு பாதகமுமில்லை யென்று

163

அவர் நினைத்திருந்தாரென்று தெரிகிறது. ஸ்ரீ கண்டரோ உத்தரா நுவாகத்திலும் தஹர வித்யாநுவ்ருத்தி யிருப்பதால் நாராயணாநுவா கம் தஹர வித்யா சேஷபூதமாக வேண்டுவதால் நாராயண்பரத்வம் ஸித் திக்கமாட்டா தென்கிறார். ராமாநுஜரோ மற்ற வாக்யங்கள் உபாஸநா விதாயகங்க ளாதலால் 'எது பரப்ரஹ்மமோ அதை உபாஸி' யென்று சொல்ல வந்ததால் அந்யபரம். இதுவோ மற்றெதையும் விதிக்க வந்ததல்ல வாதலால் அநந்ய பரம். 'अनन्यत्वेन विवक्षितत्वात् न विरुध्यते' என்கிறார். "अन्यपरेषु सर्वेषु वाक्येषु केनापि सर्वेश्वरत्वेन प्रतीयमानं तद्देवतात्वमस्तीति सामान्यतः प्रसिद्धवत् देवतैक्यम् इति सत्ताकारेण निर्णीतम्" (வேதா—271) என்கிற பங்க்தியாலும் இவ்வர்த்தம் ஸ்பஷ்டம். ஆகையால் நாரா யணாநுவாகம் அநந்யபர மென்பதை ஸித்தவத்கரித்துப் பேசுகிறாரே யல்லது பூர்வாநுவாகத்துடன் இதற்கு ஸம்பந்தம் சொல்லக்கூடுமோ வென்கிற ஸந்தேஹம் அவர் மனத்தில் ஈஷத்தேனும் உதித்திருந்ததாகச் சொல்ல இட மில்லை. அத ஏவ வேதார்த்த ஸங்க்ரஹத்திலேயே இதற்குக் கொஞ்சம் முன்னடி 'तत्र सहस्रशीर्षपुरुषप्रकरणं ह्रीश्च ते लक्ष्मीश्च पत्न्याविति नारायणस्यैवेति प्रकाशयति अयमेव नारायणानुवाके प्रतिपादितः' (வேதா. 251) என்று ஸாதித்திருக்கிறார். இங்கு எல்லா விடங்களி லும் நாராயணாநுவாகம் ஸ்வதந்த்ர மென்பதை இவர் ஸித்தவத்கரித்திருக் கிறார். ஓரிடத்திலும் இது தஹர வித்யா சேஷ பூதமல்லவென்று சொல்லவே யில்லை. இவர் ஸ்ரீகண்ட க்ரந்தத்தைப் பார்த்திருந்தால் அதைக் கண்டிக் காம லிருந்திருக்கவே முடியாது. நாராயணாநுவாகம் ஸ்வதந்த்ரமாக நாரா யண பரத்வ ப்ரதிபாதக மென்று சொல்வதற்கு ஒருவரில்லாத வரையில் ஸ்ரீகண்டரும் 'इदं सर्वम्' என்கிறவரையில் இத தஹரவித்யை ஓரே ப்ரகரண மென்றும், 'तत्रानुवाकस्थो नारायणः सर्वकारणतया उपास्यः इत्यवगम्यते' (ஸ்ரீகண் 331) என்றும் சொல்ல ப்ரவர்த்திக்கவேண்டிய ஆவச்யகதையே இருந்திராது.

அப்படியே பூர்வோதாஹ்ருத வேதார்த்த ஸங்க்ரஹ பங்க்தியில் 'अक्षरशिवशम्भ्वादिशब्दान् तत्तद्गुणयोगात् नारायण एव प्रयुज्य तद्व्यतिरिक्तस्य समस्तस्य तत्सृष्टतां तत्पाद्यतां तच्छेषतां तदात्मकतां च प्रतिपाद्य ब्रह्मशिवयोरपि इन्द्रादिसमानतया तद्विभूतित्वं च प्रतिपादितम्' என்று நாராயணனே பர ப்ரஹ்ம மென்றும் பரதத்வ மென்றும் பராயண மென்றும் பரமாத்மா வென் றும் சொல்லி, தத் வ்யதிரிக்தர்களுக்குத் தத்த்ராகத்வமும் தந்நியாம்யத்வ

மும் தச்சேஷத்வமும் ததாத்மகத்வமும் சொல்லி, ப்ரஹ்ம சிவர்களும் நாரா யண விபூதி யென்பதை ஸாதிக்கிறார். இதையே ஸ்ரீகண்டர் ‘கஂ௨௧க,தூ-௨ வஶ்வவெஶாக:’ என்கிற (1-2-4) ஸூத்ராவதாரிகையில் அக்ஷாச: அநு வதித்துப் பூர்வபக்ஷம் செய்து ஸமாதாநம் சொல்லுகிறார். எப்படியெனில்:

“நநு நாராயணாத்மா ஊதி நாராயநுவாகோக்தீ வரமெஶ்வர ஊதி ஹூ உயமு। தஉப-ந்தமு। நாராயணவரம் ப்ரஹ்ம ஊதி நாராயணஸ்ய வர ப்ரஹ்மாவஉதஷ்வா வஉகொஶவ்ரதீகாஶஶித்யாதிநா வ-ர-ஷஸ்ய ஹ்ருதய வ-ணரீகஸ்தாதகூ-ஷ்வா தஸ்ய ஊம்யெ வஹ்நிஶிவா ஊதயாதிநா ஜீவஸ்வரவெ ஊ-கூவா தஸ்யா: ஶிவாயா ஊ தி வரஊாத்ஸூவந ஜீவாநுபஉதாவிகெவந தஸெஸ்யா வாஸ்யகூவஉவமஉத்தெ। ஸ ப்ரஹ்மா ஸ ஶிவ ஊதயாதிநா தவிஹூதிஸ்வம் ப்ரஹ்மஶிவாதீநாஊ-அஹெ। அதொ நாராயணஸைவ விஶ்வவதி: வர ப்ரஹ்மஹஂதொ ஜீவாநுபஉதாவிகெவநொவாஸ்ய ஊதி தஉாத்ஸகஸெவந தஉயி கஸ்வம் தஉ-வாஸ்யஸ்வம் அ வரமெஶ்வரஸ்ய வகூ-உய-கூவிதஸித ஶுஹ”—(ஸ்ரீகண்-322)

என்று அவதாரிகை வைத்து ஸமாதானத்தில் ‘வஉகொஶவ்ரதீகாஶம்’ என்பதால் நாராயணனுடைய ஹ்ருதயத்தைச் சொல்லி ‘வரஊாத்ஸவ்யவஸ்தித:’ என்று நாராயண ஹ்ருதயாந்தர்வர்த்தியாகப் பரமேச்வரனைச் சொல்வதால் நாராயணனுக்கு உபாஸகத்வமும் சிவனுக்கு உபாஸ்யத்வமும் ஸித்திப்பதாகச் சொல்லி, ‘ஸ ப்ரஹ்மா ஸ ஶிவ ஊதயாதிநா ப்ரஹ்மவிஷ்ணு-ர-ரெந்த்ராதி வ்ரவஞ்ச விஹூதி விஶிஷ்டஸ்வம் வரமெஶ்வரஸ்யாவதிஶ்யதெ’ என்று வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ‘ப்ரஹ்மஶிவயொரவி தவிஹூதிஸ்வம் வ்ரதிவாதிதம்’ என்று சொன்னதற்கு ப்ரதிகோடியாகச் சொல்லி, மேல் இவ்வாறு சிவன் பரதத்வமாகில் தத்விபூதி கோடியில் விஷ்ணுவுக்கு நிவேசம் ஏன் சொல்லவில்லை என்பதைத் தெரிவிப்பதற்காகவே ப்ரவ்ருத்தமான ‘ப்ரஹ்மஶிவயொரவி’ என்கிற வேதார்த்த ஸங்க்ரஹ வாக்யத்திற்குப் பதிலாக நாராயணனுவாகத்தி லில்லாமலிருந்தாலும் சாகாந்தர வாக்யத்தில் இருப்பதை இங்கும் அநுஸந்திக்கவேண்டியதென்று

“அத்ரவிஷ்ணோர் ப்ரஹ்மணொவி கைவல்யொவநிஷதி ப்ரயதெ ஹ்ரு த்வுண்டரீகம் விரஜம் ஊதயாதிநா ஹ்ருத்வுண்டரீகம் வ்ரஸ்துத்ய, ஸ ப்ரஹ்மா ஸ ஶிவ: ஸெந்த்ர: ஸொக்ஷர: வரம: ஸ்வராட்। ஸ ஏவ விஷ்ணு: ஸ ப்ராண: ஸ காலொக்நி: ஊத்யாதி। தஸ்யாயொத்ராயயாஹாயஉ:” (ஸ்ரீகண்-323)

என்று சொல்லி, அதிலும் த்ருப்தி யடையாமல் 'அத்ர விஷ்ணுசப்தஸ்ய ஸ்வரூபவிவக்ஷயா விஷ்ணோ: ப்ராப்தவ்யத்வம் உபாஸகஸ்ய ப்ராப்யத்வம் ப்ரதிபாதிதம்' என்று உபாஸகத்வேந விஷ்ணு ப்ராப்தனனதால் விபூதித்வம் என்று ஸித்தமென வைத்துத் தனியே சொல்லவில்லை யென்று ஸமாதாநம் சொல்லி யிருக்கிறார். இதனால் ராமாநுஜ க்ரந்தத்தைப் பார்த்தே ஸ்ரீகண்டர் பாஷ்யம் எழுதுகிறார் என்பதற்கு வேறு ஸாக்ஷ்யம் வேண்டியதில்லை யென்பது ஸித்தம். இதற்கு மாறாக ஸ்ரீகண்டர் ப்ராசீநரானால் 'ஸர்வலோக ப்ரதீகாஸ' என்பது நாராயணனுடைய ஹ்ருதய பர மென்பதற்கும் 'விஷ்ணுசப்தேந விஷ்ணோர் க்ரஹணம் ஸர்வேஸ்வராவாஸகதயா தஸ்ய ப்ராப்யத்வாத்' என்பதற்கும் ராமாநுஜர் ஸமாதாநம் சொல்லாம லிருந்திருக்கமாட்டார்.

(தொடரும்.)

ஸ்ரீ:

அதிகரண ஸாராவளி.

[வித்வான் ஸ்ரீ. உப ஏ. வி. கோபாலாசார்யர்; திருச்சி]

ஸ்வஸ்தி ஸ்ரீரங்கநாதஸ்ய ஸ்ரீமதீ யஸ்ய ஸாஸநம் தத் ப்ரஸ்துத்ய
ஸத்ஸ்யாதாம் ஸப்தாஷ்யம் யதிபதி கதிதம் ஸம்யகாவிஷ்க்ருதம் ஸ்யாத் ।
விஸ்வஸ்மின் ஸார்வபௌம ப்ரவிஹிதவதா தேந தேவேந தத்தாம்
வேதாந்தாசார்ய ஸம்ஜ்ஞா ஸஹித பஹுவித ஸாரதத்வா தயாபாலி ॥

இந்த ச்லோகத்திலுள்ள அருமையான அர்த்தங்களைப் பராமர்சிப்போம். முதலில் 'ஸ்வஸ்தி' என்பது மங்கள சப்தம்; கடைசி ச்லோகத்தின் மூன்றாவது பாதம் முடிவில் 'ஸமஸ்தாஸ்ஸுஸ்து:' என்றிருக்கிறது. இரண்டையும் சேர்த்து 'ஸ்வஸ்தி ஸமஸ்தாஸ்ஸுஸ்து:' என்கிற மங்கள வசநத்தின் ஸ்மரணம் கிடைக்கிறது ஆத்யந்தங்களால். 'ஸ்ரீரங்கநாத:' என்று ஸ்ரீயும் தானுமாக (அதாவது தாயுந் தந்தையுஞ் சேர்ந்து) குழந்தையாகிய தனக்குக் கட்டளையிட்டுப் பேரிட்டார்களென்று ஸூசிக்கப்படுகிறது. இருவரும் சேர்ந்து இட்ட கட்டளை இது. அவ்விருவருடைய கட்டளையை முன்னிட்டுச் செய்கிறது இந்த க்ரந்தம். ஸ்ரீரங்கராஜனுடைய சாஸநத்தை (அல்லது கட்டளையைச்) சிரஸ்ஸில் மாலைபாய் வஹித்துக்கொண்டு இந்த அதிகரணஸாரமாலை செய்யப்படுகிறது. மாலையைப் போல் சாஸநத்தை வஹிப்பது ப்ரஸித்தம். சாஸநம் என்பதால் 'ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஸாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத:' என்கிற ச்ருதி ஸ்மாரிதம். அவனாலேயே விச்வத்திற்கு நாம ரூப வ்யாகரணம்

செய்யப்படப் போகிறதென்று இந்த ச்லோகத்தில் பின்னல் கூறப் படுகிறது. அதற்கு அநுகுணமாக முதலிலேயே ஸர்வ ஜகத்தையும் கட்டளையிடுகிறவன் எனக்குக் கட்டளை யிட்டான் என்கிறுர். ஸர்வ ஜகத்துக்கும் பேரிட்டவன் எனக்கும் பெயரிட்டான் என்று பின்னும் சொல்லுகிறுர். ஆக இவ்விரண்டுக்கும் ஆநுருப்யம் இருக்கிறது. ஆதிகாலத்தில் ராஜாக்களால் கொடுக்கப்படும் பிருதுகளும் க்ராம மாந்யங்களும் தாம்ர சிலா சாஸநங்களில் 'ஸ்வஸ்திஶ்ரீ:' என்று ஆரம்பித்து கொடுக்கப் படுவது வழக்கம். அம்மாதிரியே ரங்கராஜன் இவருக்கு பிருது சாஸநம் கொடுக்கையில், 'ஸ்வஸ்திஶ்ரீ:' என்று ஆரம்பித்து சாஸநம் கொடுத்திருக்கிறுர் என்னும் சமத்காரம் இவ்விடத்தில் த்யோதித மாகின்றது. 'ஶாஸநம் உஹ்யஹம்,' கட்டளையிட்டு 'வேதாந்த சார்ய' ரென்று அருளிப் பாடான வுடனே 'நாபிந்தே' என்பது போல், இங்கே, 'ஶுபம்' சப்தம் உபயோகிக்கப்படுகிறது. சாஸநத்தைச் சிரஸா வஹித்துக்கொண்டு நான் அதை நிறைவேற்றுகிறேன்.

'தஸ்ய ப்ரஸத்த்யை' என்பதை மூன்றிடத்தில் அந்வயிக்சலாம்:— ரங்க பர்த்தாவான பகவானுடைய ப்ரஸாதத்திற்காக; ஸத்யைகாலம்பியான பாஷ்யத்தின் ப்ரஸாதத்திற்காக, அதாவது தெளிவுக்காக; 'யதிபதிகவிதம் தஸ்ய ப்ரஸத்த்யை' என்று அந்வயித்து யதிபதியாகிய ஸ்ரீ பாஷ்யகாரருடைய ப்ரஸாதத்திற்காக. இதனுல், 'தத்பாஷ்யம் ஸ ச பாஷ்யக்ருச்ச ஹரி: ஸத்யக்ஷ ப்ரஸீதந்து ந:' என்று ச்ருதப்ரகாசிகையின் மங்கள ச்லோகத்தை அநுஸரித்து மூன்றும் ப்ரஸந்நமாக என்று அர்த்தம் கொள்ளலாம். எப்படி அந்நமயன் முதல் ஆநந்த மயன் வரை சுத்தியை ப்ரார்த்திப்பதில் அந்தந்த வஸ்துவுக்குத் தக்கபடி சுத்தி கோரப்படுகிறது என்று அர்த்தமோ, அப்படியே இங்கே பாஷ்ய விஷயத்தில் ப்ரஸாதமாவது தெளிந்த போதமாகும். ச்ருத ப்ரகாசிகை ச்லோகத்தில் முதலில் பாஷ்யத்தையும் பின்பு பாஷ்யகாரரையும் சொல்லியிருக்கிற க்ரமம் இந்த ச்லோகத்திலும் அநுஸரிக்கப்படுகிறது. ஆனுல் கட்டளையிட்ட ரங்கராஜனை முன்பே குறிப்பிட அவச்யமாயிற்று. 'ப்ரஸத்தி' என்கிற சப்தம் மிகவும் அபிஜாதமானது; 'ப்ரஸத்தயஶ: வாசாம்' என்று ராஜசேகர கவியின் பாலராமாயண நாடக ஆரம்பம்.

'ஸத்யைகாலம்பி பாஷ்யம்' என்பதால் வேறு பாஷ்யத்தின் பூர்வ பீடிகையில் 'ஸத்யாந்ருதே மிதுநீக்ருத்ய' என்று கூறியிருக்கிறபடி, பொய்யும் மெய்யும் கலந்ததாகிய அத்பாஸத்தை ஆலம்பித்த தல்ல வென்று பாவம். அத்யாஸ மென்பது அந்தப் பாஷ்யத்தின் முகவுரையில் விஸ்தாரமாய் உபபாதிக்கப் பட்டிருக்கிறது. அதில்லாமல் மேல் பாகங்கள் நிற்கமாட்டாவாகையால், அதையே ஆலம்பித்து அந்தப் பாஷ்யம் நிற்கிறது. ஸத்யத்தையும்

அநுருதத்தையும் கலக்காமல் ஸத்ய மொன்றையே ஆலம்பித்தது இந்த பாஷ்யம். இது அத்யாஸத்தை ஆலம்பித்ததல்ல. 'யதிபதிகமிதம்' என்று 'தஸ்மை நூநம் அபிதா ஹ்யேஷ' என்கிற ச்ருதிக்கு ஸ்மாரணம். ரங்கபதியைப்போல் நமக்கு யதிபதி; அவரெப்படி தேவனோ அப்படி பாஷ்யகாரர் யதீச்வரர். 'ஸ்வயம் யதிபதி:' என்கிற ச்லோகத்திலுள்ள 'யதிபதி' சப்தம் இங்கே க்ரஹிக்கப்பட்டது. 'ஸ்வத்யாவஸ்' என்று வேதத்தை அத்யாபநம் செய்வதில் வேதத்தில் எப்படி கௌரவமோ அப்படியே பாஷ்ய வாக்யங்களிலும் கௌரவம் என்று பாவம். 'ஸூத்ராக்ஷரங்களை எப்படி ஸ்ரீபாஷ்யகாரர் வ்யாக்யாநம் செய்தாரோ அப்படியே பாஷ்யாக்ஷரங்களைக் கவநமுள்ள சிஷ்யர்களுக்கு அர்த்த க்ரஹணம் செய்வித்தோம். வேதாத்யயந விஷயத்தில் அத்யாபந விதியை ஆதரிக்காமல் அத்யயந விதியைக் கைக்கொண்டாலும் பாஷ்ய விஷயத்தில் அத்யாபநத்திலேயே விதியை நாம் ஆதரித்தோம்.' பாஷ்யத்தை ப்ரவர்த்திப்பித்தல் ப்ரதாந கைங்கர்ய மென்று நமது கொள்கை. சரீர பாத பர்யந்தம் சாரீரக ப்ரவசந வ்ரதத்தை ஆதரிக்க வேணு மென்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் இரண்டாவது அங்கத்தில் ஸ்பஷ்டமாக நியமிக்கப்படுகிறது. வேத விஷயத்தில் அக்ஷர ராசி க்ரஹணத்திலேயே அத்யயந விதி பர்யவஸித்தாலும் வ்யாக்யாந க்ரந்தமான பாஷ்ய விஷயத்தில் அக்ஷர க்ரஹணம் அர்த்த க்ரஹணம் இரண்டும் குரு முகமாகக் கிடைக்கவேணும். அத்யயநம் பண்ணுகிறவர்களைக் காட்டிலும் அத்யாபகர்களே அதிகமாக இருக்கிறார்களென்று ச்ருதப்ரகாசிகையில் கூறப்பட்டது. பாடம் சொல்லிவைக்கும் காலத்தில் தான் சொல்லுகிறவர்களுக்கும் ஜ்ஞாநத்தில் தெளிவு அல்லது ப்ரஸாதம் ஏற்படுமென்பது அநுபவ ஸித்தம். அவஹிதர்களும் புத்திமான்களுமான சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்வதில் எல்லோரும் கலந்து விஷயங்களைச் சர்ச்சை செய்து எல்லோருக்கும் மேல் மேல் தெளிவுண்டாகும். 'ஸஹ வீர்யம் கரவாவஹை' என்று குருவும் சிஷ்யனும் சேர்ந்து விஷய சர்ச்சை செய்ய வேண்டிய வித்யை என்று அவ்வளவு விநயத்தோடு ஆரம்பிக்கவேணும். அப்படி விநயத்துடன் ப்ரவர்த்தித்தால் 'தேஜஸ்விநாவதீதமஸ்து' என்று குரு சிஷ்யர் இவர்களுடைய படிப்பும் தேஜஸ்ஸுடன் ஜ்வலிக்கும். சிஷ்யரான ப்ருகுவும் குருவான வருணரும் இப்படி ப்ரார்த்தித்தது. இவர்களுடைய யசஸ்ஸும் சாச்வதமாய் ப்ரதிஷ்டிதமாம்படி 'ஸா பார்கவீ வாருணீ வித்யா' என்று இருவர்கள் பெயரும் அமைந்த திருநாமம் ஏற்பட்டது. 'ஓய்வில்லாமல் ஸ்ரீ பாஷ்யத்தைக் கவநமுள்ள சிஷ்யர்களுக்கு அத்யயநம் செய்துகொண்டே இருந்ததனால் தான் இந்த ஸாராவளி க்ரந்தத்தைச் செய்யத் துணிந்தோம்; சிஷ்யர்களுக்கு எப்படி எப்படி சங்கைகள் உண்டாகுமென்கிற விஷயம் அவர்களுக்குப் பாடம் சொல்

168

வதனால் உபாத்யாயருக்கு நன்றாய்த் தெரியுமாதலால், இன்னின்ன சங்கைகள் புத்திமான்களுக்கு உண்டாகுமென்று தெரிந்து, அந்தச் சங்கைகளை அநுவதித்து, அதற்கு ஸமாதாநஞ்செய்ப ஸௌகர்யமாயிற்று.' அப்படியே இந்த க்ரந்தத்தில் அநேக சங்கைகள் புதிதாகக் கிளப்பிப் பரிஹரிக்கப்படுகின்றன.

'ப்ரபஞ்சம் முழுவதற்கும் ஸாமாந்யமாய்ப் பெயரும் ரூபமும் செய்வித்தவன் எனக்கு இப்பொழுது அபூர்வமாய் ஒரு நாமகரணம் செய்தான்.' ஸஞ்ஜ்ஞா மூர்த்தி க்லுப்தி அதிகரணம் இங்கே புத்திஸ்தம். அதிலுள்ள ஸஞ்ஜ்ஞா சப்தம் இங்கே ப்ரயோகிக்கப்பட்டது. 'அநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி' என்கிற ச்ருதி இங்கே அநுஸரிக்கப்படுகிறது. அங்கேயுள்ள 'அநு' என்கிற உபஸர்க்கம் இங்கே 'விஹிதவதா' என்பதோடு சேர்க்கப்பட்டது. விச்வ ஸ்ருஷ்டி காலத்தில் விச்வத்துக்கும் நாமரூப வ்யாகரணம் செய்யும் பொழுது 'யதாபூர்வமகல்பயத்' என்கிறபடி முன் கல்பங்களில் இருந்தது போலவே பெயரையும் ரூபத்தையும் வ்யாகரணம் செய்தான். ஒவ்வொரு கல்பத்திலும் அந்தந்த வஸ்துக்களுக்குப் பெயரும் உருவமும் வெவ்வேறல்ல. 'ஸமாந நாமரூபத்வாத்' என்கிற ஸூத்ரப்படி கல்பந்தோறும் வேற்றுமை நாமரூபங்களுக்குக் கிடையாது. அங்கே நாம வ்யாகரணம் முன் போலொழியப் புதிதல்ல. ஜலத்துக்கு முன்போல ஜலமென்றே பெயர்; அக்நிக்கு அக்நியென்றே பெயர். அந்த விஷயத்தில் முன்னிருந்ததை அநுஸரித்து அநுவிதாநமே யொழிய அபூர்வமான புது விதாநம் கிடையாது என்பதைக் காட்ட 'அநுவிஹிதவதா' என்று ப்ரயோகிக்கப்பட்டது. 'ருஷீணாம் நாமதேயாநி யாச்ச வேதேஷு த்ருஷ்டய: । சர்வர்யந்தே ப்ரஸூதாநாம் தாந்யேவைப்யோ ததாத்யஜ:' என்றும், 'தேவா தேவைர்ப்யதீதைர்ஹி ரூபைர்நாமபி ரேவ ச' என்றும் ஸ்ம்ருதி. இப்படி ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் பழய பெயரே யொழியப் புதுப் பெயரிடவில்லை; தனக்குமட்டும் கருணையால் ஒருபுதுப் பெயரிட்டான். முன்னிருந்த பெயரையே கொடுத்தால் அது முன்னில்லாததைக் கொடுத்ததாகாது. வாங்கிக் கொள்கிறவனுக்கு முன்பு இல்லாததைப் புதிதாய்க் கொடுத்தால்தான் தாநமேற்படும். இந்த அம்சம் 'அபூர்வம்' என்கிற பதத்தினால் காட்டப்பட்டது. 'தேந தேவேந' என்று 'தேவம் தேவ தைக்ஷத' என்கிற நாம ரூப வ்யாகரண ச்ருதி பாகம் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. இப்பெயரிட்டதும் அந்தத் தேவனுக்கு ஒரு விசேஷ உல்லாஸமுண்டாகி காந்தி ஏற்பட்டது போலும். 'தேவ' சப்தம் காந்தியைச் சொல்லும். 'தீவ்யதிர் தாநகர்மா' என்று பட்டர் ஸாதித்திருக்கிறபடி 'தேவ' சப்தம் தாதாவையும் சொல்லும். ஆகையால் தேவனால் கொடுக்கப்பட்டது என்கிற

பதச் சேர்க்கை உசிதமாகும். இப்படி அருள் நிறைந்து எனக்கு இட்ட அபூர்வமான பெயரை நான் அந்வர்த்தமாகச் செய்ய வேண்டுவது உசித மல்லவா?

வேதாந்தாசார்யர் என்று ஸ்ரீரங்க ராஜன் பெயரிட்டதனால் அதிகரண ஸாராவளி செய்ய வேண்டிய அவச்யமென்ன வென்று ஆலோசிக்க வேணும். அதிகரண ஸாராவளி யென்பது ஸ்ரீ பாஷ்யத்துக்கும் ச்ருதப்ரகாசிகைக்கும் ஸாரமும் விவரணமும் ஆகும். 'ஹாஷ்யம் ரங்கமிவாபரம்' என்கிற ச்லோகத்தின்படி ஸ்ரீ பாஷ்யத்தில் ஸ்ரீ ரங்கநாதனுடைய சேஷித்வம் அதாவது பரத்வம் ஸ்பஷ்டமாய்க் காட்டப்படுகிறது. வேதாந்தமென்பது ஸ்ரீ பாஷ்யம். ரங்கம் போன்றது பாஷ்யம்; ரங்கம் எப்படி ரங்கநாதனுடைய அர்ச்சா மூர்த்தியைக் காட்டுகிறதோ. அப்படியே பாஷ்யம் அவனுடைய சேஷி ஸ்வரூபத்தைக் காட்டுகிறது. ஆகையால் அவன் வேதாந்தாசார்யனென்று இட்ட பெயர் பாஷ்ய பாவங்களை நிச்சங்கமாய் விவரணம் செய்தாலொழிய அந்வர்த்தமாக மாட்டாது. 'வேதாந்தாசார்ய ஸம்ஜ்ஞா ப்ரணயனவிதினா வர்ணயந்தீ ஸ்வரூபம்' என்று கடைசியிலும் இந்த விஷயம் ஸூசிக்கப்படுகிறது. 'எனக்கு நாமதேயம் கொடுத்த உபகாரத்திற்கு அவருடைய ரூபதேயத்தைத் தெளிவாய் எல்லோரும் காணக் காட்டவேணும்' என்று பாஷ்ய ஸாரமான இந்த க்ரந்தம் பண்ணுகிறார். நாமம் ரூபம் என்று இரண்டுள; அதில் ஒன்றாகிய நாமத்தை எனக்குக் கொடுத்து என்னை ப்ரகாசப் படுத்தியதற்காக அவர் ரூபத்தை நான் ப்ரகாசப்படுத்துவது உசிதம் என்று ஸூசநம். 'சிஷ்யர்கள் யுக்தர்கள், ரொம்பவும் கவனமாய்க் கேட்டார்கள்; அவர்களுக்கு அனேகந்தடவை பாடஞ் சொன்னேன்' என்றால் போதுமோ? 'அவர்கள் உம்மிடம் பக்ஷபாதமுள்ளவர்கள். அவர்கள் ச்லாகிக்கும்படியான க்ரந்தம் செய்ததினால் மாத்ரம் வேதாந்தாசார்யப் பட்டம் நிலைக்குமோ?' என்று ஆக்ஷேபம் வர, 'பஹுஜ்ஞர்களான முழுதுணர்ந்த அநேகம் பெரியோர்கள் அவஹிதர்களாய்த் திருச்செவி சாத்திக் கொண்டிருக்கையில் அவர்கள் திருவோலக்கத்தில் அந்தப் பெயரை இந்த க்ரந்தம் செய்வதன் மூலமாய் யதார்த்தமாகச் செய்கிறேன்' என்கிறார். சிஷ்யர்கள் விஷயத்தில் யுக்த சப்தம்போல இங்கே அவஹித சப்தம். சிஷ்யர்கள் ஜிஜ்ஞாஸுக்கள்; பெரியோர்கள் ஜ்ஞாநிகள். அவர்கள் ரஸிக்கும்படியுள்ள க்ரந்தம். அவஹிதர்களான பெரியோர்கள் முன்னிலையில் கொடுத்த பெயரென்றும் அந்வயிக்கலாம். பெயரை ஸத்யமாகப் பண்ணுகிறேன். வாசாரம்பண ச்ருதியைக் கொண்டு விச்வத்திற்கு அஸத்யத்வத்தை ஸாதிப்பர் பரர். அங்கே நாமதேயம் என்னும் பதத்தில் 'தேயம்' என்கிற ப்ரத்யயத்தை ஸ்வார்த்தமாக [அதாவது கேவலம் நாமம் மட்டுமே யொழிய அந்த நாமத்துக்கு வாச்யமான வேறு

விதமான வஸ்து இல்லை யென்று] அர்த்தம் செய்கிறார்கள். எப்படி நாம மென்பது யதார்த்தமென்று தீர்மானிக்க முடியாதோ ரூபமும் அப்படியே தானென்று அவர்கள் எண்ணம். நாமத்திற்கே அதாவது பெயருக்கே ஸத்யத்தன்மையை நாம் ஸ்தாபித்து விட்டால் நாமம் போல் ரூபமும் பொய் யென்று சொல்லமுடியாது. பகவான் செய்த நாமரூபங்கள் ஸத்யம். அவன் கொடுத்த நாமமே ஸத்யமென்று நிலைத்து விட்டால் கைமுதிக ந்யாயத்தால் ரூபங்களின் உண்மை நிலைக்குமென்று பாவம். ஆகையால் விச்வத்திற்கும் நாம ரூபங்கள் இரண்டையும் செய்த பகவானால் கொடுக்கப் பட்ட தமது பெயரை ஸத்யமாகச் செய்கிறார். 'ஸத்யஸ்ய ஸத்யம்' என்று சொல்லப்படும் ஸத்ய ஸங்கல்பனான பகவான் கொடுத்தருளியதை ஸத்யாப நம் பண்ண வேண்டியது ந்யாயந்தானே. பெயருக்கு அர்த்தம் சூந்யமானால் அது ஸம்ஸ்காரமின்றி வ்யர்த்தமாகும். 'க்ஷேமாத்யஸம்ஸ்காரஹதாமிவோக்திம்' என்கிறார் பாரவி. ஸம்ஸ்கார மன்றியில் விவக்ஷித விபரீத மான அர்த்தத்தில் சொல்லும் சொல் பெருந் துக்க மென்கிறார் ஆதி கவி.

'ஸவஹிதவஹவிஸ' என்று தனியாக க்ரியா விசேஷணமாக அந்வயித்து 'ஸார்த்தம்' என்பதை அர்த்தத்துடன் என்று தனிப் பதமாகக் கொண்டு, அர்த்தத்துடன் ஆக்குவதில் இரட்டிப்பான வசநத்தால் அதிக உறுதிச் சொல்லாகவும் கொள்ளலாம். 'கிரவி' என்பதனால், நிமித் தம், ஸ்வப்நம், ஸாக்ஷாத் ஹரியே யென்று கூறப்படும் அர்ச்சக முகமாக வெளிப்படும் நியமநம் முதலியவற்றால் நிபுணமாய் ஊஹிக்கப்படும் கட்டளை என்று பாவம். அது இன்னபடி யென்று நிர்வசநம் செய்யமுடியாதபடி அநிர் வாச்யம். 'ஸ்வஸ்தி' யென்கிற பதம் மங்களத்துக்கு மட்டுமே தாத்பர்யமாக வும் ஆநர்த்தக்யம் இல்லாமலும் ப்ரயோகிக்கப்பட்டது. அவ்யயமான மங்களம். மங்களத்தில் அவ்வளவு அதிகமான நோக்கு. கேவலம் அத்ருஷ்டார்த்தமாக ப்ரயோகம். ஸ்விஷ்டக்ருதாதிகளைப் போல உபபார்த்தமாகச் செய்வதில் நோக்கில்லை. 'ஜயதி ஸ்வஸ்த்யவாயாம் வேத அத்யாய ஸம்ஜ்ஞாநிதாநஜநநு ஹ்யாம் ஸம்ஹிதா ஸம்ஹதா' என்று மஹாசார்யர் சண்டமாருதத் தில் இந்தப் பதங்களையும் அர்த்தங்களையும் சேர்த்து அநுபவித்தார். அந் வர்த்த மென்பதை 'ஸவாயாம்' என்று விவரித்தார். இங்குள்ள 'ஸம்ஹதா' சப்தமும் ஸம்ஜ்ஞா சப்தமும் அங்கேயும் க்ரஹிக்கப்பட்டன. ஆதியஞ் சோதியான் நாம ரூப வ்யாகரணம் செய்த பரோக்ஷமான பரம்பொருளே இங்கே ரங்கநாயகனாக எதிரே புலப்படுகிறது என்பதைக் காட்ட 'விச்வத் துக்கும் நாமரூபாநுவிதாநம் செய்த அந்தத் தேவன்' என்று ரங்க பர்த்தா வோடு ஒன்றாகச் சொல்வதினால் காட்டப்படுகிறது. அதுவே இதுவென்று பாவம். அது வென்று சாஸ்த்ரத்தில் கேள்வியால் தெரிகிறது. இதோ ரங்கத்தில் இது வெனத் தெரிகிறது, இந்த அர்த்தம் 'தஸ்ஸ' என்று அபி திஸ்தவத்தின் முதல் ச்லோகத்தில் காட்டப்பட்டது. 'தத்விஷ்ணோ பரமம் பதம்' என்கிற ச்ருதியில் 'தஸ' என்னும் கண்ணுக்குப் புலப்படாத அதை 'ஸதஸ' என்று எதிர் நிற்பது போலத் தெளிவாக ஸாக்ஷாத்கரித்து என்று உணர்த்தப்படுவதுபோல் இங்கேயும் நோக்கு.

ஸ்ரீ:

। ஸ்ரீமதே ஸ்ரீந்ருஸிம்ஹவரப்ரஹ்மணே நம: ।

யோ(அ)ந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகீயம்.

ஜாதி ஸம்பத்தமான விவாதம்.

தென் கன்னடத்தைச் சேர்ந்த மங்களூர் என்னும் பட்டணத்தில் ம-ா-ா-ஸ்ரீ. எம். என். ப்ரபு என்று பெயருடைய ஒரு வக்கீல் (அட்வோகேட்) இருக்கிறார். அவர் ஜந்மத்தால் ப்ராஹ்மணன். இரண்டொரு மாஸங்களுக்கு முன், அவர், ப்ராஹ்ம ஸாமாஜிகர்களென்று (Brahmo Samajists) வ்யவஹரிக்கப்படும் சில ஹிந்துக்களால் நடத்தப் பெற்ற ஒரு போஜந கோஷ்டியில் அந்வயித்தாரென்றும், அந்தக் கோஷ்டியில் பஞ்சம ஜாதீயர்களுட் சிலரும் அந்வயித்திருந்தபடியால் அவர் அவர்களுடன் ஸஹ போஜநம் செய்ததடியாக தர்மத்தைக் கடந்துவிட்டாரென்றும், அவருடைய குருவாகியத் தென் கன்னட முல்கிக் காசி மடாதிபதி அவரை ஜாதியை விட்டு பஹிஷ்காரம் செய்தாராம். அப்படி அவர் பஹிஷ்காரம் செய்தது தவறுதலென்று ப்ரபு, மங்களூர் ஸப்ஜட்ஜ் முன்னிலையில் ஒரு மனு செய்துகொள்ள, அந்த ந்யாயாதிபதி அதை விசாரித்து, மடாதிபதி பஹிஷ்காரம் செய்தது ந்யாய விருத்தமென்றும், அதை ஸமீகரணம் செய்வதற்காக மடாதிபதி சிஷ்யருக்கு ஏழாயிர ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானம் செய்தார். சென்ற மாஸத்தில் இந்த விவாதம் மதிராஸ் ஹைகோர்ட்டுக்கு (பெரிய ந்யாய ஸ்தலத்திற்கு) முடிவு விசாரணைக்காக வந்தது. இரண்டு ஹைகோர்ட் ந்யாயாதிபதிகள் இந்த விவாதத்தைப் பற்றிய அம்சங்களெல்லாவற்றையும் விசாரித்தார்கள். விசாரணை முடிவில், அவர்கள், ஸப் ஸட்ஜ செய்திருக்கும் தீர்மானம் ந்யாய விருத்தமென்றும், ஜாதி ப்ரயுக்தங்களான விவாதங்களை விசாரித்து முடிவு செய்வதற்கு இந்த மடாதிபதிகளைப் போன்றவர்களே தகுந்த அதிகாரிகளாதலால் அவர்கள் இம்மாதிரித் தீர்மானங்களைச் செய்வதில் துஷ்டமான மநோபாவத்தால் ப்ரேரிதர்களாயிருந்தாலொழிய அந்தத் தீர்மானங்

களை மறுபடியும் விசாரிக்கவாவது அவைகளை மாற்றவாவது ராஜாங்க ந்யாயாதிபதிகளுக்கு எவ்வித அதிகாரமும் இல்லையென்றும், ப்ரக்ருதத்தில் மடாதிபதியின் மனோ பாவம் தோஷ துஷ்டமா யிருந்தது என்று ஸாக்ஷ்யத்திலிருந்து ஏற்படவில்லை யாதலால் அந்த மடாதிபதியால் செய்யப்பட்டுள்ள பஹிஷ்காரம் தங்களால் மாற்றப்பட மாட்டாதென்றும் தீர்மானம் செய்தார்கள்.

இந்தத் தீர்மானத்தை ந்யாயத்திற்கும் தர்மத்திற்கும் ஒத்த தீர்மான மென்றே நாம் அங்கீகரிக்கிறோம். ப்ராஹ்மணனாகப் பிறந்தவன் இதர ஜாதீயர்களுடன் ஸஹ போஜனம் செய்யலாமா கூடாதா வென்பது ப்ரக்ருதத்தில் விசார விஷய மன்று. அப்படி ஒருவன் செய்யும் பக்ஷத்தில் அவனை ஜாதியை விட்டு விலக்க மடாதிபதிகளைப் போன்ற பெரியோர்களுக்கு அதிகாரம் இருக்கின்றதா இல்லையா என்பதே விஷயம். தம்மால் வஹிக்கப்படும் ஸ்தாநம் காரணமாக, அவர்களுக்கு அம்மாதிரியான அதிகாரம் உண்டென்றே நாம் சொல்வோம். தவறுதலான மார்க்கங்களில் செல்லும் நோக்கமுள்ளவர்களைத் தடுப்பதற்கு ராஜாஜ்ஞை தைவாஜ்ஞை முதலியவைகளைப் போல, மஹாஜனங்களின் அப்ரீதியும் ஒரு பலமான ஸாதனம். மஹா ஜனங்களின் ப்ரீத்யப்ரீதிகள் எவ்விடத்தில் அவ்யாவர்த்தகங்களாக அநாதரிக்கப் படுகின்றனவோ, அவ்விடத்தில் நாம் ச்ரேயஸ்ஸைக் காண்கிறோமில்லை. மடாதிபதிகளைப் போன்ற பெரியோர்கள் அந்தந்த வகுப்பைச் சேர்ந்த மஹாஜனங்களின் ப்ரதிநிதி ஸ்தாநீயர்களாக இருக்கிறபடியால், அவர்கள், தமது தர்மத்தை ஒழுங்காகப் பாதுகாக்க வேண்டுமானால், தம்மைச் சேர்ந்த மஹா ஜனங்களுடைய அபிப்ராயத்தை நிர்தாக்ஷிண்யமாகவும் நிர்ப்பயமாகவும் வெளியிட வேண்டியது அவசியமே; அப்படி வெளியிடப்படும் அபிப்ராயத்துக்கு அந்தந்த வகுப்பினர்கள் உட்பட வேண்டியதும் அவச்யமே. இதுதான் தத்வம். இதை நன்கு உணர்ந்து ஹைகோர்ட் ந்யாயாதிபதிகள் தர்ம்யமான தீர்மானத்தைச் செய்தார்களென்பது நமக்கு மிக்க ஸந்தோஷத்தை ஜநிப்பிக்கின்றது.

இந்தத் தத்வத்தின் கௌரவத்தைச் சற்றேனும் ஆதரியாமல் இக்காலத்தியப் பெரியோர்களுட் சிலர், நமது சிறியோர்களுக்கு ஸ்வாதந்த்ர்யத்தை உபதேசிக்க ப்ரவ்ருத்தர்களாய், அச்சிறியோர்கள் தம் தம் கூடஸ்தர்களான வயோ வ்ருத்தர்களையும் ஜ்ஞாந வ்ருத்தர்களையும் இகழ்ந்து அநாதரிக்கும்படியும் அவர்களுடைய அபிப்ராயங்களையும் உக்திகளையும் பரிஹஸிக்கும்படியும் நடப்பித்து வருகிறார்கள். இதன் பலத்தை இப்பொழுதே நாம் பலவிடங்களில் காண்கிறோம்; இது பூர்ண பரிபாகத்தை அடைந்த பிறகு எம்மாதிரியான அச்ரேயஸ்ஸில் பர்யவஸிக்குமென்று யாரால் குறிப்பிட்டுச் சொல்லக்கூடும்?